## இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழகம் - 2013

இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1981 இன் 74 ஆம் இலக்க இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசிலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்**

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 07 இன் பிரகாரம் தற்போது பாவனைக்கு எடுக்கப்படுகின்ற போதிலும் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட ரூபா 2,193,737 கிரயமான தளபாடப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை மீள் கணிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அந்த சொத்துக்களின் மொத்தத் தேறிய பெறுமதியும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பௌதீக மீதி ரூபா 394,568 தொகையான வெளியிடப்பட்ட இருப்பு நிதிக்கூற்றுக்களில் ரூபா 506,416 ஆகக் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 111,848 இனால் மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

**2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

உயர் கல்வி நிறுவனத்திற்கான தாபனவிதிக் கோவையின் XX ஆவது அத்தியாயத்தின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் கல்விசார் பதவியணிக்காக உள்வருகை, வெளிச்செல்லல் அறிக்கை பேணப்படாமையின் காரணமாக அவர்களுக்குச் செலுத்தப்பட்ட ரூபா 54,449,743 தொகையான சம்பளம் மற்றும் படிகளை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டில் ஒப்பந்தங்களின் அடிப்படையில் பிடித்து வைத்தல்களின் பெறுமதி ரூபா 11,971,616 ஆக இருந்ததுடன் அதில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பிடித்து வைத்தல்களின் கூட்டுத்தொகை ரூபா 9,635,190 ஆக இருந்தது.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 371(2) | வழங்கக்கூடிய ஆகக்கூடிய முற்பண எல்லையை விஞ்சி 2013 நவம்பர் மாதத்தின் போது இரண்டு சந்தர்ப்பங்களில் ஒரு உத்தியோகத்தருக்கு ரூபா 500,000 படி முற்பணம் வழங்கப்பட்டிருந்ததுடன் 2014 மே 31 வரையிலும் இந்த முற்பணத்தை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1994 யூன் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை | ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்பு பணத்தை செலுத்துகையில் கல்விசார் படிகள் கருத்திற்கொள்ளப்பட்ட காரணத்தால் 1997 ஆம் ஆண்டு முதல் 2011 ஆகஸ்ட் வரை ரூபா 4,155,912 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

### 2.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டுச் சபை அங்கத்தவர்களுக்கும் செனட் சபை அங்கத்தவர்களுக்கும் சபை அமர்வுகளுக்கு வருகை தருவதற்காக 2011 செப்தெம்பர் 15 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றுநிருப இல. 58(2) இன் பிரகாரம் வழங்கப்பட முடியுமான படிகளுக்கு மேலதிகமாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் XIV ஆவது அத்தியாயத்தின் 8.2 ஆம் பிரிவின் பிரகாரம் மைல்கூலி கவனத்திற்கு எடுக்கப்படாமல் நிறுவனப் பணிப்பாளரின் அங்கீகாரமின்றி ரூபா 1,500 முதல் 10,000 வரை போக்குவரத்துப் படி வழங்கப்பட்டிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டிற்காக அவ்வாறு வழங்கப்பட்ட போக்குவரத்துப் படிகளின் பெறுமதி ரூபா 363,200 ஆக இருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளின் நிதி விளைவுகள் ரூபா 2,300,007 பற்றாக்குறையானதுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 10,184,520 ஆனமையால் பற்றாக்குறை ரூபா 7,884,513 இனால் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டில் செலவினங்களுக்கான அரசாங்க மானியம் ரூபா 15,422,120 தொகை அதிகமாகக் கிடைத்தமை மற்றும் மூலதன நிதியேற்பாடு ரூபா 42,941,704 இனால் பதிவழிக்கப்பட்டமை பற்றாக்குறை குறைவடைந்தமைக்கான பிரதான காரணமாக இருந்தது.

### 3.2 நிறுவனத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

நிறுவனத்தின் 02 ஊழியர்களினால் சேவையிலிருந்து அகற்றப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நிறுவனத்திற்கு எதிராக நீதிமன்றங்களில் 03 வழக்குகளும் ஒரு ஊழியர்களினால் தொழில் திணைக்களத்தில் ஒரு வழக்கும் தொடரப்பட்டிருந்தன.

## 4. செயற்பாடு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டின் போது 50 மணித்தியாலங்கள் தொடக்கம் 164 மணித்தியாலங்கள் வரையான வீச்சில் 10 விரிவுரையாளர்கள் விரிவுரை நடாத்தியிராமை அவதானிக்கப்பட்டது.

**4.2 ஒரு மாணவருக்கான கிரயம்**

மீளாய்வாண்டின் போது கல்வி நடவடிக்கைகளுக்காக 333 மாணவர்களுக்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த மீண்டெழும் செலவினம் ரூபா 190,592,915 ஆனதுடன் முன்னைய ஆண்டில் 359 மாணவர்களுக்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த மீண்டெழும் செலவினம் ரூபா 185,334,934 ஆக இருந்தது. மீளாய்வாண்டில் ரூபா 572,351 ஆகக் காணப்பட்ட ஒரு மாணவனுக்கான கிரயத்துடன் முன்னைய ஆண்டில் ரூபா 516,253 ஆன ஒரு மாணவனுக்கான கிரயத்துடன் ஒப்பிடுகையில் 10.86 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

**4.3 முகாமைத்துவ செயற்திறமையீனம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 மார்ச் 22 ஆந் திகதி உள்ளகக் கணக்காய்வாளர் சுயமாக விலகியிருந்ததுடன் அத்திகதியில் உள்ளவாறு அவரின் அடிப்படைச் சம்பளம் ரூபா 41,840 ஆக இருந்தது. பணிக்கொடைப் பணம் கணிப்பீடு செய்யும் போது அடிப்படைச் சம்பளம் ரூபா 25,145 ஆக ஈடுபடுத்தப்பட்டமையின் காரணமாக தொழில் நியாய சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் ரூபா 76,302 தொகையான மிகைக் கட்டணைத்தைச் செலுத்த வேண்டியேற்பட்டது. எனினும் அதற்கான பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சரியான தொழில்நுட்ப மதிப்பீடு இன்றி ரூபா 58,140 கிரயமான 17 Bubble Jet Printers 2011 திசெம்பர் 31 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த அச்சிடல் இயந்திரத்தின் மூலம் பிரதியொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு ரூபா 25 இற்கு மேற்பட்ட செலவினத்தைச் செய்யவேண்டியுள்ளது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் போது மாத்திரம் கணனி அச்சிடல் இயந்திரத்திற்காக ரூபா 290,000 தொகையில் Cartridge கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) திறைசேரி அங்கீகாரமின்றி பல்கலைக்கழகத்தின் மூலம் நடாத்தப்படுகின்ற வெளிவாரி பாடநெறிகளின் மூலம் கிடைக்கின்ற இலாபத்திலிருந்து 24 உத்தியோகத்தர்களுக்கு படிகளைச் செலுத்துவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. திறைசேரி அங்கீகாரமின்றி 2013 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட 4 வெளிவாரி பாடநெறிகளிலிருந்து ரூபா 1,976,400 தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்த போதிலும் படிகளைச் செலுத்துவதற்குப் போதியளவான மிகையொன்று காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) ஆண்டின் போது 2 வெளிவாரி பாடநெறிகள் ரூபா 259,644 தொகையான நட்டத்துடன் நடாத்தப்பட்டிருந்ததுடன் அதில் ஒரு பாடநெறியான பௌத்த ஆலோசனைப் பாநெறிக்காக எவ்வித அறவிடல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.4 செயற்பாட்டுச் செயற்திறமையீனம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பௌத்த கல்வி மற்றும் பாலி மொழிக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்ட ஆய்வுகளுக்கு உதவியளிப்பதற்காக ஸ்தாபிக்கப்பட்டிருந்த ஜியூன் பௌத்த ஆய்வு மற்றும் வெளியீட்டு நிதியம் 2006 இன் பின்னர் உரிய நோக்கத்தை எய்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டிராததுடன் மீளாய்வாண்டின் இறுதியிலும் நிதிய மீதி ரூபா 1,978,789 ஆகக் காணப்பட்டது.

(ஆ) 2013 ஆம் ஆண்டின் போது நூலகப் புத்தகங்களின் மெய்மையாய்விற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன் அந்தக் குழுவின் அறிக்கையின் பிரகாரம் 4224 புத்தகங்களின் பற்றாக்குறை அவதானிக்கப்பட்டது.

## 4.5 குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்

2004 ஆம் ஆண்டு முதல் ரூபா 512 மில்லியன் செலவில் சகல வசதிகளுடனான நவீனமயமாக்கப்பட்ட கட்டிடம் உள்ளடங்கலாக உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டிருந்த போதிலும் இதற்கு ஒப்பாக கூடுதலான மாணவர்கள் சேர்க்கப்படுவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது 379 மாணவர்கள் விண்ணப்பித்திருந்த போதிலும் 107 மாணவர்களே சேர்க்கப்பட்டிருந்தனர்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2013 – 2017 இன் கூட்டிணைந்த திட்டத்திலும் 2013 இன் கொள்வனவுத் திட்டத்திலும் 07 கட்டிட செயற்திட்டத்திற்காக செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ரூபா 52.3 மில்லியனில் மீளாய்வாண்டின் போது ரூபா 16.63 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அது எதிர்பார்த்த செலவினத்தில் 31.79 சதவீதமாகும். அவ்வாறே 05 செயற்திட்டங்களுக்காக ரூபா 25.25 மில்லியன் தொகையில் மதிப்பிடப்பட்டு மீளாய்வாண்டின் போது எவ்வித செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் 2013 இன் கொள்வனவுத் திட்டத்தில் அவசர நிர்மாணமாகக் காண்பிக்கப்பட்ட யோக தியான நிலையத்தின் நிர்மாணச் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழகத்தின் மஹோபாத்தியாயர் அவர்களின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஆ) மனித வள முகாமைத்துவம்
(இ) வெளியக செயற்திட்டங்களுக்கான கணக்கீடு
(ஈ) வாகனக் கட்டுப்பாடு